குறை பல ஸ்தாபனங்களிலிருந்து தெரிவிக்கப்படுவதால், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு ஆதரவளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

* 190 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether any new vaccine for leprosy treatment has been invented at the Leprosy Research Centre and Sanatorium at Kotagiri near Vellore?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கோட்டகிரியில் தொழுநோய் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்த நலம்பேண் மருத்துவமனை இல்லை. ஆனல் வேலூரை அடுத்த காரிகிரியில் அவ்வித நிலையம் ஒன்று உள்ளது. இந்நிலையத்தில் தொழுநோய் சிகிச்சைக்கு ஊசி மூலம் போடும் மருந்து ஒன்றும் கண்டுபிடிக்கப் படவில்லை.

Tuberculosis

* 191 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any survey has been conducted into the incidence of T. B. in the State in 1968; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்தக் கொடிய வியாதி இலட்சக்கணக்கான மக்களை அழித்துவருவதால் இந்த எலும்பு உருக்கி நோயை விஞ்ஞான ரீதியில் தடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எலும்பு உருக்கி நோய் குறித்து மாதிரிக் கணக்கெடுப்பு எப்பொழுது எடுக்கப்பட்டது என்று கேள்வி கேட்கப்பட்டது. 1955-ம் ஆண்டிலிருந்து 1958-ம் ஆண்டு வரையில் (இந்தியா முழுவதிலும்) அப்படிப்பட்ட மாதிரிக் கணக்கெடுப்பு எடுக்கப் பட்டது. ஆனல், தமிழகத்தில் அப்பொழுது அந்தக் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை. அகில இந்திய கணக்கெடுப்பு அடிப்படையில் பார்க்கும்போது, 1.4 சதவீதம் அளவில் இருந்தது, 1.8 சதவீதமாக இந்த எலும்புருக்கி நோய் பற்றியிருப்பதாகக் கணக்கு இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில், எலும்புருக்கி நோயினல் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தக்க முறைகள் கையாளப்படுகின்றன. அதுபற்றி அரசு தீவிரமான கவனம் செலுத்தி வருகிறது.

1969 செப்டம்பர் 11]

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த எலும்புருக்கி நோய், தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களை அதிகமாகப் பீடித்திருக்கிறது. அதைக் குறைப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அது மேலும் பரவுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அது சம்பந்தமாக சர்க்கார் தீவிர கவனம் செலுத்தி அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக சிலபல இடங்களில் அதற்கான நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலையம் வைப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தட்ப வெட்ப நிலையுள்ள இடமாகப் பார்த்து வைக்க வேண்டும். அப்படித்தான் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று தொழிற்சாலையில் பணிபுரிகிறவர்களை இந்த நோய் அதிகமாகப் பாதிக்கிறது என்றால், அதுபற்றிய இடங்களைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அங்குள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிக்க இத்தகைய நிலையம் வைப்பதுபற்றி அரசு தீவிரமாகக் கவனம் செலுத்தும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, எலும்பு உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பாக பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய தொழிலாளிகள் இந்நோயினால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய நிபுணர் குழுவை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி, ஆராய்ச்சியை நடத்தி, அதற்குரிய தடுப்பை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நோய் வராமல் தடுக்க, முன்கூட்டியே ஊசி போடுகின்ற முறையும் இருந்துகொண்டு வருகிறது. அதனுடைய துவக்க நிலையிலேயே தடுத்துநிறுத்த வழிவகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த நோயைப் பொறுத்தவரையில், நோயாளிகளை மருத்துவ நிலையங்களில் வைத்துத்தான் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதில்லை என்றும் நோயாளிகள் இருக்கும் இடங்களிலேயே வைத்து அதற்கான சிகிச்சை அளிக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவ மனைகளில் வைத்துத்தான் சிகிச்சை அளிக்கவேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு அத்தகைய நிலையில் வைத்து தக்க பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. கனம் உறுப்பினர் கூறுவது போன்று அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இந்த நோய் அதிகமாக இருக்கிறதென்றால், முறைப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கை எடுத்து, தடுப்பு ஊசி மருந்துகள் போட்டு, அந்த நோயை அகற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.